தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்த்தோம். இதை ஓராண்டுக்கு ஒத்திவைப்பது முறை அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மூன்று மாதங்களுக்கு ஸ்பெஷல் ஆபிசர் இருக்கட்டும். 3 மாதத்திற்குள் அதன் தேர்தலை நடத்திவிடுவதுதான் சரியானதாகும். இப்போது திருவிழா எக்சிபிஷன் நடக்கும். கார்ப்பரேஷன் முறையாக டெண்டர்களைக் கோரி அதை நடத்துகின்ற ஒழுங்கை இப்போதுதான் ஏற்படுத்தினோம். இப்போது ஸ்பெஷல் ஆபீசர் அதை மாற்றி மறுபடியும் அதில் குழப்பத்தை உண்டாக்கி விடுவார்களோ என்று அஞ்சுகிறேன். ஸ்பெஷல் ஆபீசர் கண்காணிக்கப்பட வேண்டும். கண்காணிப்பது என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் கண்காணிக்கப்படுவதைத் தான் சொல்கிறேன். 3 மாத காலத்திற்குள்ளாகவாவது இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதா ill-conceived, very wrong and it is politically motivated and it has got some purpose which is only to spite some individuals. இது கூடவே கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பேரவையின் ஆய்வுக்கு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை யொட்டிச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய இரண்டாவது தலைநகர் என்று சொல்லத்தக்க அளவுக்கு சீரும் சிறப்புமிக்க ஊர் மதுரை மூதூர் என்பதனை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அங்கே தமிழகத்தின் இரண்டாவது மாநகராட்சி அமைந்திருப்பதற்கு—இன்றைக்கு நீண்ட காலமாக அந்த நகரத்து மக்கள் விரும்பிய சில கோரிக்கைகள் நிறைவேறியதை நிச்சயமாக நான் மறுக்க மாட்டேன். ஆனால், உருவான அந்த மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டது. திரு. கே.டி.கே. சுட்டிக் காட்டியதைப்போல மஸ்டர் ரோல் மோசடி கூட அங்கே நடைபெறவில்லை. நிர்வாகம் சீராக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அது கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்டதற்கான காரணங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ''பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் முதுகில் பாண்டியன் அடித்த அடி உலகத்து ஜீவராசிகள் அனைத்தின் முதுகிலும் விழுந்தது'' என்று அந்த ஊர் திருவிளையாடல் புராணம் எடுத்துச் சொல்லும்.

(9) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து சில பார்வையாளர்கள் துண்டு பிரசுரங்களை கோஷமிட்டுக் கொண்டு அவைக்குள் எறிந்தது குறித்து.

(இத்தருணத்தில் பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து சில பார்வையாளர்கள் பேரவையில் மலர்களையும், சில தாள்களையும் விசிறி எறிந்து கொண்டே குரல் கொடுத்தார்கள்.)

1975 ஏப்ரல் 19]

THIRU V. KRISHNAMOORTHY (Nellikkuppam) Sir,: I move that these people be taken into custody and put into jail for thirty days.

திரு. கே. டி. கே. தங்கமணி : உடனடியாக சிறைக்கு அனுப்ப வேண்டுமென்று இல்லை. அவை முன்னவர்தான் இது போன்ற தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும். உடனடியாக அவர்கள் யார், என்ன காரணத்திற்காக இப்படிச் செய்தார்கள் என்பதை எல்லாம் தீர விசாரித்துக் கொண்டு என்ன தண்டனை கொடுக்கலாம் என்பது பற்றி முடிவு செய்து கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, now that a motion has been moved by the Hon. Member, Mr. Krishnamoorthy, in connection with this disturbance, I would like to suggest that we are not prepared to accept the suggestion to put them in jail for thirty days. No doubt, we are prepared to accept that they should be arrested . But to say that they should be jailed for thirty days is rather not good. The whole thing can be analysed and we can find out what exactly is their problem. We do not want this sort of behaviour, but we can find out what has happened to them and what they want. Therefore I suggest that a lenient attitude may be taken, but at the same time justice can be rendered.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சபை நடக்கக் கூடிய சமயத்தில் பார்வையாளர் காலரியில் இருந்து கோஷங்களை எழுப்பியது மட்டுமல்ல—அங்கே இருந்து சில பொருள்கள் வீசப்பட்டன. அந்தப் பொருள்கள் கீழே உள்ள உறுப்பினர்களின் மேல்படுகிறது. அவை வேறு பொருள்களாக இருந்தால்? அதை யோசிக்க வேண்டும். திட்டமிட்டு — நான்கைந்து பேர்கள் கும்பலாக அமர்ந்து—அவர்கள் யார் என்று தெரியும்—மர்மத் தீவின் மன்னன் என்று தன்னைச் சொல்லிக்கொண்டு டாக்டர் கலைஞர் அவர்களை எதிர்த்து சைதாப்பேட்டைத் தொகுதியில் போட்டியிட்டவர்தான்—அவர்கள் இப்படிச் செய்திருப்பது மிகப் பெரிய குற்றமாகும். one month is also lenient.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : மேலே இருந்து வீசியவர்களை சார்ஜென்ட் கூட்டிக்கொண்டு போய் இருக்கிறார்கள். . . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இன்று ஒரு அசாதாரண சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி முழுமையாக விசாரித்து முடிவு செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தை யாரும் அலட்சியப்படுத்தக் கூடாது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை அவர் நோய்வாய்ப் பட்டவரா? வேறு எந்தவிதமான காரணத்தினால் இது போன்ற காரியத்தைச் செய்தார் என்பதை எல்லாம் ஆராய்ந்தறிந்து—

நமக்கு அவரை ஒரு மாதம் தண்டிப்பதற்கு அதிகாரம் இருந்தாலும்—அதைப் பிரயோகம் செய்கிற நேரத்தில் ஆரஅமர யோசித்துச் செய்ய வேண்டுமென்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : அவர்களை அழைத்துப் போய் இருக்கிறார்கள். விசாரித்து விவரம் தெரிந்தவுடன் நான் அது பற்றித் தெரிவிக்கிறேன். இப்போது திரு. காளிமுத்து தொடர்ந்து பேசுவார்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) 1975ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75).—தொடர்ச்சி.

திரு. கா. காளிமுத்து : அங்கே தனி ஒருவர் மீது ஏற்பட்ட கோபத்தின் காரணமாக அந்த மாநகராட்சி கலைக்கப்பட்டிருந்தாலும் இன்றைக்கு மதுரை மாநகராட்சி மக்கள் அத்தனை பேர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே தேர்தல் நடைபெற்று மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு மாநகராட்சியாக அது விளங்காத நிலையில் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கக்கூடிய மக்களுடைய பிரதிநிதிகள் செயல்பட முடியாத காரணத்தினால் பல்வேறு நலன்கள் புறக்கணிக்கப்பட வேண்டிய நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சமீபத்தில் கூட மதுரை மாநகராட்சியின் இருதயம் ஆக இருக்கிற ஜான்ஸி ராணி பூங்காவை அழித்து கட்டடங்கள் கட்டப் போவதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்தது. உடனே அங்கே கூட்டம் கூட்டி அதற்கான கண்டனத்தைத் தெரிவித்த பிறகு அதை நிறுத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கூறுவதற்குக் காரணம் மாநகராட்சியின் ஒரு பிரிவாகிய மக்கள் பிரதிநிதிகள் அவை இயங்காத காரணத்தினால் இப்படிப்பட்ட செயல்களில் அந்த நிர்வாகம் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே.டி.கே. அவர்கள் கோடிட்டுக் காட்டியதைப் போல சித்திரைத் திருவிழாவையொட்டி நடத்தப்படக் கூடிய பொருட் காட்சிக்குக் கடந்த ஆண்டில் கிடைத்ததைவிட இந்த ஆண்டு குறைந்த ஏலத்திற்கு இப்போது கொடுக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அது உண்மையா என்று சரிவரத் தெரியவில்லை. அந்தப் பிரிவு இயங்கினால் இப்படிப்பட்ட நிலை நிச்சய